**நாமல்ஓய பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2013 இல் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5,092,719 தொகையான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 4,284,956 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பூர்த்தி வேலையின் பெறுமதி ரூபா 1,902,073 தொகையான வாவின்ன கடைத்தொகுதி 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,892,073 ஆக மூலதனமாக்கப்பட்டிருநச்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 4,046,740 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளத்தின் கட்டிடம் ரூபா 4,236,834 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 2013 இன் தெயட்ட கிருல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பூர்த்தி வேலைப் பெறுமதி ரூபா 8,074,024 தொகையான பரகஹகெலய கலாசார நிலைய கட்டிடம் மூலதனமாக்கப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 07 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்தும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 7,269,657 தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன். அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 7,269,657 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | சபைக்கு சொந்தமான ரூபா 450,000 பெறுமதியான டெக்டர் டேலர் மூலதனமாக்கப்படவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். குறைபாடுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | 2018 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,419,166 தொகை ரூபா 1,258,083 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 57,120 தொகையான நானாவித செலவினங்கள் கணக்குகளில் அட்டுறுவாக காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | மீளாய்வாண்டுக்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 சொத்து விடயங்கள் மற்றும் பொது வைப்புக் கணக்கின் மீதிகள் அதற்குரிய உபயோக பதிவேடுகள் மற்றும் பதிவேட்டின் தரவுகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 76,956,614 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இனக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் கணக்குளில் கொண்டு வரப்படுகின்ற ரூபா 37,513 தொகையான வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 13,969,260 தொகையான 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,567,873 தொகையான 03 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(i) மற்றும் (ii) ஆம் பிரிவு | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி தற்காலிக கனரக வாகன இயந்திர செயற்படுத்துனரை சேர்த்து 2018 யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 187,280 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 207 | சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளைக் கையேற்று மதிப்பீட்டுப் பெறுமதியை நிலையான சொத்துப் | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் காணிகளை மதிப்பீடு செய்து கையேற்பதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவேட்டில் உள்ளடக்கி இருக்கவில்லை. | வேண்டும். | எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | சுபைக்குச் சொந்தமான வாகனத்திற்கும் இயந்திர உபகரணத்திற்கும் ஏற்பட்ட விபத்துக்கள் மற்றும் நட்டம் தொடர்பாக இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு பேணப்பபட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் பதிவேடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(3) | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 150,236 தொகையான காலாவதியான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஓட்ட நிலையில் காணப்படுகின்ற 08 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஓட்ட நிலையில் காணப்படுகின்ற 03 வாகனங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில் மாகாண சபை ஊடாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2015 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவதற்கு கைவிரல் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் கைவிரல் அடையாள இயந்திரம் மின்னல் தாக்கத்திற்கு உட்பட்டமையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. | | காரணமாக செயலிழந்துள்ளது. அதனை பழுதுபார்த்து அல்லது புதிய இயந்திரம் ஒன்றை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 08 கடைகள் மதிப்பீடு செய்யப்படாமல் 2018 ஆம் ஆண்டின் போதும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் ஏதிர்காலத்தில் மதிப்பீடு செய்து முறையாக வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 612,895 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,300,493 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 270,000 | 66,000 | 66,000 | -- | 315,000 | 75,550 | 75,550 | -- |
| (ii) | வாடகை | 2,438,600 | 2,336,012 | 2,353,833 | 23,039 | 2,358,600 | 1,843,205 | 1,829,063 | 50,690 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 372,000 | 712,590 | 712,590 | 22,505 | 256,000 | 287,670 | 293,470 | 22,505 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,013,006 | 2,644,399 | 2,552,486 | 413,967 | 2,101,000 | 1,299,987 | 880,430 | 977,408 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் எதிர்பார்த்த செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஓவ்வொரு ஆண்டிற்காகவும் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

அதனால் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்யும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரத்தின் முன் பக்க கண்ணாடிக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் காணப்பட வேண்டிய பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சாரதிக்கு அறிவுறுத்தி பிரத்தியேக கோவைக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவி அணியினரில் 05 பதவிகளில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | புதவி அணியினரின் வெற்றிடங்கள் நிரப்பபட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சொன்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோக்த்தர்களிடமிருந்து | அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடனை | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| அறவிடாது காணப்பட்ட ரூபா 39,388 தொகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமாக ரூபா 450,000 பெறுமதியான 02 டேலர்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.2 சொத்துக்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கப்பெறாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 இன் தெயடகிருல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 8,074,024 பெறுமதியான கலாசார நிலையம் போதியளவான வருமானத்தைப் பெறும் வழிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை உழைக்கும் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது வருமானத்தை உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |

**3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்படுகின்ற 44 காணிக்கூறுகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்படவேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட ரூபா 1,700,000 பெறுமதியான 02 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்த வித பணிகளிலும் ஈடுபடுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். பழுதுபார்ப்பதற்கு தேவையாக இருந்தமையினால் எதிர்காலத்தில் அதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 59,758,361 பெறுமதியான வாகனங்கள் மற்றும் 09 இயந்திர உபகரணங்கள் என்பவற்றை காப்புறுதி செய்யாமலும் 12 வாகனங்களுக்கு வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமலும் 2018 ஆம் ஆண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | வருமான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றக் கொள்வதற்கும் காப்புறுதி செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது காப்புறுதி செய்யப்பட்டு வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | ஒவ்வொரு வருடங்களுக்காகவும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். துற்போது தயாரிக்கப்படுகின்றது. |